**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 263 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ஆறுச்சாமி

Father's Name : சின்ன கிருஷ்ணன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of January** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம், சூலூர் தாலுகா கலங்கல் ரோட்டில் குடியிருந்து கொண்டு வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். துரைசாமி, சரஸ்வதி, நந்தகுமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். 30.04.2021 ஆம் தேதி மதியம் சுமார் 12.45 மணியளவில் எங்கள் வீட்டில் மராமத்து வேலை செய்து கொண்டிருந்த பொழுது எதிரிகள் துரைசாமி, சரஸ்வதி, நந்தகுமார் மற்றும் அடையாளம் தெரியாத ஒரு நபர் வயது சுமார் 30 இருக்கும் அப்பொழுது எதிரி நந்தகுமார் அவர் வீட்டின் காம்பவுண்டில் ஏறி எங்கள் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் மீது கடப்பாரையை ஆக்ரோஷமாக வீசினார். ஆனால் எங்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த நபர்கள் மீது கடப்பாரை விழவில்லை.

2. மேலும் எதிரி நந்தகுமார் வேலை செய்து கொண்டிருந்த நபர்களை பார்த்து ஒழுங்காக வேலை செய்யாமல் சென்று விடுங்கள் இல்லை என்றால் அவ்வளவுதான் என மிரட்டினார்கள். மேலும் மராமத்து பணி செய்து கொண்டிருந்தவர்களை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்.

பின்னர் சரஸ்வதி அவ்விடத்தில் இருந்து தடியை எடுத்து தடியால் அவர்களை அடிங்கடா என எதிரி நந்தகுமாரிடம் சொன்னார். எங்கள் வீட்டில் மராமத்து பணி செய்து கொண்டிருந்தவர்கள் ஓடினார்கள். துரைசாமி மற்றும் அடையாளம் தெரியாத நபர் கீழே கடந்த கல்லை எடுத்து எங்கள் வீட்டில் மராமத்து பணி செய்து கொண்டிருந்தவர்கள் மீது எரிந்தார்கள். பணி செய்து கொண்டிருந்தவர்கள் மீது கல் பட்டத்தில் சிறிய அளவில் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் மறைவான இடம் சென்று நின்று கொண்டோம்.

3. மேலும் எதிரிகள் எங்களை பார்த்து விடமாட்டோம் என சத்தம் போட்டு ரகளை பண்ணி கொண்டிருந்தார்கள். அங்கிருந்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்த பொழுது மணி 01:30 இருக்கும். போலீசார் தற்பொழுது காவல் நிலையத்தில் போலீஸ் இல்லை என்றும் நாளை அல்லது மாலை நேரம் வருமாறு கூறினார்கள். அன்றைய தினமே மாலை சுமார் 7 மணி அளவில் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி எழுத்து மூலமாக புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதற்கு முன்பாகவும் எதிரிகள் எங்களை சைகை மூலமாக மிரட்டி வந்தார்கள். இன்றைய தினமும் எதிரிகள் சைகையால் என்னை மிரட்டினார்கள்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.21 18:58:02 +0530

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**